# தேசிய தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அதிகாரசபை 2011

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களைத் தவிர்த்து 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தேசிய தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அதிகாரசபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 இலங்கை கணக்கீட்டு நியமம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களுடன் உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 09 இன் பிரகாரம் முறையான காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முதலியவற்றுடனான இணக்கமின்மை

பின்வரும் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|---|
| (அ) | 2006 இன் 17 ஆம் இலக்க தேசிய தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 19(3) ஆம் பிரிவு | உரிய அறிவுறுத்தல்களுக்கு இணங்க அதிகாரசபையினால் தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி நிதியம் தோற்றுவிக்கப்பட்டு தொழில்நுட்ப அபிவிருத்திச் செயற்பாடுகளுக்காக ஒதுக்கப்பட்ட அல்லது கிடைக்கின்ற |

| | |
|---|---|
| | அனைத்து பணமும் செலவுவைக்கப்பட வேண்டுமெனக் காட்டப்பட்டிருந்தும் அந்த அறிவுறுத்தல்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை |
| (ஆ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க அரசாங்க முயற்சிகள் சுற்றுநிருபம் | |
| 5.2.1 ஆம் பிரிவு | சுற்றுநிருப அறிவுறுத்தல்களின் பிரகாரம் பாதீடு தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டி ருக்கவில்லை. |
| 6.5.1 ஆம் பிரிவு | 2011 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் நிதி ஆண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்கள் 2012 யூன் 28 ஆந் திகதியே கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்ப ட்டிருந்தன. அதாவது 04 மாத தாமதத்தின் பின்னராகும். |

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதி மீளாய்வு

#### 2.1.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கு அதிகாரசபையின் செயற்பாடுகள் ரூபா 530,441 மிகையினை விளைவித்திருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 1,759,693 ஆக இருந்ததனால் நிதிசார் விளைவுகள் ரூபா 2,290,134 சாதகமான முன்னேற்றத்தினை விளைவித்துள்ளது.

#### 2.1.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான அபிவிருத்திச் செலவுகள் ரூபா 10,521,203 இனால் அதாவது 120% இனால் அதிகரிக்கப்பட்டிருந்தும் மீண்டுவரும் செலவுகளுக்காக திறைசேரியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட மானியம் மற்றும்

பிற்போட்ட மூலன வருமானம் ரூபா 21,654,073 இனால் அல்லது 113% ஆல் அதிகரித்தல் இச்செயற்பாட்டு விளைவுகளில் ரூபா 2,290,134 தொகையான சாதகமான முன்னேற்றத்திற்கு பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2008 பெப்ரவரி 04 ஆந் திகதி அப்போதிருந்த தலைவருக்கு ஒதுக்கப்பட்டிருந்த ஒரு வாகனம் அவர் நாட்டுக்கு வெளியே இருந்த சந்தர்ப்பத்தின் போது சாரதியற்ற நபர் ஒருவரால் ஓட்டிச் சென்ற போது விபத்துக்குள்ளாகியிருந்தது. விபத்தில் ஏற்பட்ட நட்டம் குறித்த நபரால் ஏற்கப்பட்டது என்பதனாலும் அதன் மூலம் அதிகாரசபைக்கு நிதிசார் நட்டம் ஏற்படவில்லை எனவும் கருதி மிகுதி நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அரசாங்க நிறுவனத்திற்கு உசித்துடைய ஏதேனும் சொத்து விபத்திற்கு உள்ளாகும் வேளையில் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறை நி.பி 101 இலிருந்து 113 வரை உள்ளதனால் விபத்திற்குரிய பொறுப்பான நபரை நிர்ணயித்தல், நட்டத்தின் அளவை நிர்ணயித்தல், நட்டத்தை அறவிடும் முறைமை, பொலிஸ் அறிக்கையின் பிரதியைப் பெற்றுக்கொள்ளல் முதலிய முறையான நடவடிக்கைகள் எதுவும் அதிகாரசபையால் இவ்விபத்து தொடர்பாக பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அதிகாரசபையினால் 2008 ஆம் ஆண்டிலிருந்து ஆலோசகரின் சேவை பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் 2011 ஆம் ஆண்டின் போது ஆலோசனைக் கட்டணமாக ஒரு மாதத்திற்கு ரூபா 60,000 படி ரூபா 720,000 செலுத்தப்பட்டிருந்தது. எனினும், உரிய ஆலோசகரால் வழங்கப்பட்ட சேவைகள், அவரால் தயாரிக்கப்பட்ட அறிக்கை, மேற்கொள்ளப்பட்ட மேற்பார்வைகள் அல்லது திட்டமிடல் நடவடிக்கைகள் முதலியவற்றை உள்ளடக்கிய அறிக்கை 2011 ஆம் ஆண்டிற்காக வழங்கப்படாதிருந்ததனால் செலுத்தப்பட்ட இவ் ஆலோசனைக் கட்டணம் அதிகாரசபைக்கு விளைவற்ற செலவு என்பதனை கணக்காய்வில் மறுக்கமுடியாதுள்ளது.

(இ) மீளாய்வாண்டின் போது அதிகாரசபையால் தனியார் கம்பனிக்குச் சொந்தமான கட்டிடத்தில் 4,441 சதுர அடிக்காக ரூபா 4,382,072 செலுத்தி பெற்றுக்கொள்ளப்பட்ட அலுவலக வளவை அறைகளாகப் பிரித்தல் முதலியவை தொடர்பாக ரூபா 3,240,149 தொகை அதிகாரசபையின் நிதிகளிலிருந்து செலவு செய்யப்பட்டிருந்தது.

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்

### 4.1 கூட்டிணைந்த திட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 15 நடவடிக்கைகளுக்காக ரூபா 23 மில்லியன் பெறுமதி ஒன்று காட்டப்பட்டிருந்தும் வருடாந்த மதிப்பீட்டில் 2107 ஆம் செலவு விடயத்திற்காக மாத்திரம் ரூபா 23 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்தது. 2107 ஆம் செலவு விடயத்தின் (ஏனைய செலவுகள்) கீழ் 10 விடயங்களுக்காக எதுவித மதிப்பீடும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் கூட்டிணைந்த திட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்ட காலப்பகுதிக்கான தொழில் முயற்சி அபிவிருத்தி நோக்கெல்லை உறுதியாக இனங்காணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டத்தில் 03 ஆவது செயற்பாடாகக் காட்டப்பட்டிருந்த விளைதிறனை மேம்படுத்தலின் கீழுள்ள விடயத்திற்காக வருடாந்த பாதீடாகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீட்டில் நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் காட்டப்பட்டிருந்த 04 ஆவது செயற்பாட்டிற்காக ரூபா 0.5 மில்லியன் ஆண்டின் (Cleaner Production) இறுதி இரண்டு காலாண்டுகள் தொடர்பாகக் காட்டப்பட்டிருந்தது. எனினும் வருடாந்த பாதீட்டில் அதற்காக நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை. செயல்நடவடிக்கைத் திட்டத்தின் 05 ஆவது செயற்பாட்டிற்காக ரூபா 02 மில்லியன் 2011 ஆம் ஆண்டின் தொடக்க இரண்டு காலாண்டுகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் வருடாந்த பாதீட்டில் ரூபா 11.4 மில்லியன் 2011 ஆம் ஆண்டிற்குரியவையாகக் காட்டப்பட்டிருந்தது.

(இ) செயல் நடவடிக்கைத்திட்டத்தின் 06 ஆவது செயற்பாட்டின் 6.1 இலிருந்த 6.5 வரையான உப விடயங்கள் தொடர்பாக வருடாந்த பாதீட்டில் ரூபா 05 மில்லியன் வரை காட்டப்பட்டிருந்தும் ஒவ்வொரு விடயத்திற்கான நிதிசார் பெறுமதியை குறிப்பாக இணக்கம் செய்யும் வகையில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 7 ஆவது மற்றும் 8 ஆவது செயற்பாடுகளுக்காக பணத்தை ஒதுக்கீடு செய்தல் வருடாந்த பாதீட்டில் எந்த விடயத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டது என்பது குறிப்பாகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

இதற்கிணங்க கூட்டிணைந்த திட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு செயல்நடவடிக்கைத் திட்டமும் பாதீடும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

## 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

2011 ஆம் ஆண்டிற்கான உள்ளபடியான வருமானம் மற்றும் செலவுகளுக்கும் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதிக்குமிடையே குறிப்பிடத்தக்க அளவு முரண்கள் காணப்பட்டிருந்தமையால் செலவு மதிப்பீடு செயற்திறனை முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக்கருவியாகப் பயன்படுத்துவதற்கு முகாமைத்துவம் தவறியிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது அதிகாரசபையின் தலைவருக்குத் தெரிவிக்கப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பதவியணியினர்
(இ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(ஈ) செலவுக் கட்டுப்பாடு